DINA MALAR

15 APRIL 2023

PAGE 17

# பல்கலையில் தலித் வரலாறு கருத்தரங்கு: துணைவேந்தர் குர்மீத்சிங் தகவல்

**புதுச்சேரி,ஏப்.15–**

புதுச்சேரி பல்கலையில் 'தலித் வரலாறு மாதம்' என்ற தலைப்பில் சிறப்பு கருத்தரங்கம் நடத்தப்படும் என துணைவேந்தர் குர்மீத் சிங் தெரிவித்தார்.

புதுச்சேரி பல்கலையில் அம்பேத்கரின் 132 வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இடஒதுக்கீடு பிரிவு தொடர்பு அதிகாரி அருள் வரவேற்றார்.

அம்பேத்கர் சிலைக்கு துணைவேந்தர் குர்மீத் சிங் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து நுழைவு வாயிலில் அலங்கரித்து வைத்திருந்த அம்பேத்கர் படத்திற்கு மலர் துாவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், அம்பேத்கரை போற்றும் வகையில், பல்கலையில் 'தலித் வரலாறு மாதம்' என்ற தலைப்பில் சிறப்பு கருத்தரங்கம் நடத்தப்படும். விழாவில் மத்திய இணை அமைச்சர் முருகன் பங்கேற்க உள்ளார் என குறிப்பிட்டார்.

விழாவில் இயக்குனர் தரணிக்கரசு, சிறப்பு அதிகாரி ராஜீவ் ஜெயின், பதிவாளர் ரஜ்னீஷ் புடணி, நிதி அதிகாரி லாசர், தேர்வு கட்டுப்பாட்டாளர் சதானந்த ஜி சாமி, நுாலகர் விஜயகுமார், மக்கள் தொடர்ப்பு பிரிவு உதவி பதிவாளர் மகேஷ், உதவி பதிவாளர் முருகையன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.